இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 14-06-2024

# ஆர்.எஸ்.எஸ். கோபத்தின் பின்னணி

ஆர். எஸ்.எஸ். அமைப்பின் அரசியல் பிரிவுதான் பா.ஜ.க. பா.ஜ.க.வின் தாய் அமைப்புதான் ஆர்.எஸ்.எஸ். - இதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால், ஆர்.எஸ்.எஸ்.க்கு அடங்கிய பிள்ளையாக இல்லாமல், அதையே அடக்கும் பிள்ளையாக வளர்ந்ததால் தான் அந்த அமைப்பே மோடியைக் கைவிட்டது. விமர்சிக்கத் தொடங்கியது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு வெளிப்படையாக பா.ஜ.க.வுக்காகப் பணியாற்றவில்லை. அதன் தலைவரான மோகன் பகவத், மோடி மீண்டும் ஆட்சி அமைக்க ஆசீர்வாதம் எதையும் வழங்கவில்லை. 'நாங்கள் பா.ஜ.க.வுக்கு வாக்களிப்போமே தவிர, யாரையும் வாக்களிக்க வைக்கப் பணியாற்ற மாட்டோம்' என்று அந்த அமைப்பைச் சேர்ந்த உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த தொண்டர்கள் ஆங்கில ஊடகங்களில் வெளிப்படையாகவே பேட்டி அளித்தார்கள். இந்த நிலையில் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு பா.ஜ.க.வை, குறிப்பாக மோடியைக் கடுமையாகவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் விமர்சிக்கத் தொடங்கி இருக்கிறது ஆர்.எஸ்.எஸ். அமைப்பு.

மோடியின் தன்முனைப்பையே ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் அதிகமாக விமர்சனம் செய்து வருகிறார். 'எந்த ஒற்றை மனிதரே, அனைத்தையும் தீர்த்து வைத்து விடுவார் என்று நம்புவது தவறு' என்று தேர்தலுக்கு முன்னதாகவே மோகன் பகவத் சொன்னார். அதையேதான் இப்போதும் சொல்லி இருக்கிறார் மோகன் பகவத்.

புதிய பா.ஜ.க. அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்ற நாளில் நாக்பூரில் ஆர்.எஸ்.எஸ். ஊழியர்களுக்கான பயிற்சித் திட்டத் தொடக்க விழாவில் மோகன் பகவத் கலந்து கொண்டு பேசினார். "ஒரு உண்மையான சேவகர் வேலை செய்யும் போது கண்ணியமான நடத்தையைப் பராமரிக்கிறார். கண்ணியத்தைக் கடைப்பிடிப்பவர் தனது வேலையைச் செய்கிறார். 'இதை நான் செய்தேன்' என்ற அகங்காரம் இல்லை. அத்தகைய நபருக்கு மட்டுமே சேவகர் என்று அழைக்கப்பட உரிமை உண்டு. உண்மையான சேவகர்கள் தம்பட்டம் அடிக்க மாட்டார்கள். அவர்களிடம் ஆணவம் இருக்காது" என்று சொன்னது மோடியை மனதில் வைத்துத் தான் என்று விளக்கங்கள் பொதுவெளியில் பரவி வருகின்றன.

**"தேர்தல் என்பது யுத்தம் அல்ல, பலத்தை எல்லாம் காட்டி ஆக்ரோஷமாக தேர்தல் களத்தில் செயல்பட வேண்டிய அவசியமும் இல்லை. தேர்தல் பிரச்சாரத்தில் கண்ணியமும், நாகரிகமும் அவசியம். இந்தத் தேர்தலில் அவை பின்பற்றப்படவில்லை. கண்ணியத்தைக் கடைப்பிடிப்பவரே உண்மையான மக்கள் சேவகர். மக்கள் பணி செய்பவரையே, அந்தப் பணி செய்யும் தலைவனை சேவகன் என்கிறோம். நான் சொல்வது மட்டுமே உண்மை, அது மட்டுமே செல்லுபடியாகும் என்பது முற்றிலும் தவறான அணுகுமுறை" என்று மோடியின் செயல்பாடுகளை விமர்சித்துள்ளார் மோகன் பகவத்.**

தேர்தல் நேரத்தில் கண்ணியமற்ற வகையில் மோடி பேசியதன் மூலமாக, பொதுவெளியில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் விமர்சிக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டியும் அவர் பேசி இருக்கிறார். "தேவையில்லாமல் ஆர்.எஸ். எஸ். அமைப்பையும் வம்புக்கு இழுத்தார்கள். தேர்தலில் எதிர்த்து நிற்பவர்கள் எதிரிகள் அல்ல" என்றும் சொல்லி இருக்கிறார் பகவத். மோடியின் கண்ணியமற்ற உரைகளால் தனது அமைப்பும் விமர்சிக்கப்பட்டது என்று பகவத் கருதுகிறார்.

மோகன் பகவத் மறைமுகமாக விமர்சித்தார் என்றால், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அதிகாரப்பூர்வ இதழான 'ஆர்கனைசர்' வெளிப்படையாகவே விமர்சித்து எழுதி இருக்கிறது. "நரேந்திர மோடியின் செல்வாக்கு என்ற குமிழுக்குள் வசதியாக அமர்ந்து கொண்டு, எப்படியும் 400 இடங்களை வெற்றி பெற்றுவிடுவோம் என்ற அதீத நம்பிக்கையில் இருந்த பா.ஜ.க. தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் தேர்தல் முடிவானது உண்மை நிலவரத்தை உணர்த்தி விட்டது. தேர்தல் என்றால் களத்தில் இறங்கி வேலை பார்க்க வேண்டும். சமூக வலைதளங்களில் போஸ்ட் போடுவதாலோ, செல்ஃபி போடுவதாலோ வெற்றி பெற்று விட முடியாது" என்று கிண்டலடித்துள்ளது 'ஆர்கனைசர்'.

"மாயையில் சிக்கிய பா.ஜ.க. தொண்டர்களும் தலைவர்களும் மோடியின் செல்வாக்கில் நம்பிக்கை கொண்டு, தெருக்களில் இருந்த களநிலவரத்தை காதுகொடுக்காமல் இருந்தார்கள்" என்று மண்டையில் கொட்டி இருக்கிறது அந்தப் பத்திரிகை.

கட்சி மாறி வந்தவர்களுக்கு அதிகமாகப் போட்டியிடும் வாய்ப்பை வழங்கியதும் தோல்விக்குக் காரணம் என்றும் அந்தப் பத்திரிகை சொல்லி இருக்கிறது. அதுவும் உண்மைதான். 441 இடங்களில் போட்டியிட்ட பா.ஜ.க., மாற்றுக் கட்சியில் இருந்து வந்த 110 பேருக்கு போட்டியிடும் வாய்ப்பை வழங்கியது. இதில் 69 பேர் தேர்தலில் தோற்றுப் போயிருக்கிறார்கள். கடந்த ஓராண்டில் மட்டும் பா.ஜ.க.வின் வாஷிங் மிஷின் மூலமாக மிரட்டப்பட்டு கட்சியில் இணைக்கப்பட்ட 26 பேரில் 21 பேர் தேர்தலில் தோற்றுள்ளார்கள். இதையும் 'ஆர்கனைசர்' விமர்சித்துள்ளது.

கட்சிகளை உடைக்கும் பா.ஜ.க.வின் கீழ்த்தரமான செயல்களை 'ஆர்கனைசர்' கடுமையாகக் கண்டித்துள்ளது. மராட்டியத்தில் ஏற்பட்ட தேர்தல் தோல்விக்கு இதுவே அடிப்படைக் காரணம் ஆகும் என்கிறது அந்தப் பத்திரிகை.

மோடி என்ற தனிமனிதரின் மூலமாக அனைத்தும் தீர்க்கப்பட்டு விடும், அவர் ஒருவரே போதும் என்ற தன்முனைப்பு எண்ணமும் - மக்களின் பிரச்சினைகள் எதையும் தீர்க்காமல் சமூக வலைதளங்களில் பொய்களைப் பரப்புவதன் மூலமாக வெற்றி பெற்றுவிடலாம் என்று பா.ஜ.க. நினைத்ததும், மணிப்பூர் போன்ற பெரிய வன்முறைப் பிரச்சினைகளைக் கூட பா.ஜ.க. தீர்க்க முனைப்புக் காட்டாததும், தேர்தல் நேரத்தில் கண்ணியக் குறைவாகப் பேசியதும், கட்சிகளை உடைத்ததும், கட்சி மாறிகளுக்கு வாய்ப்பு வழங்கியதும் - ஆகிய பல்வேறு குற்றச்சாட்டுகளை ஆர்.எஸ்.எஸ். அமைப்பு வெளிப்படையாக வைத்துள்ளது. இவை எதுவும் புதிய கருத்துகள் அல்ல. பொதுவெளியில் சொல்லப்பட்டவைதான். அதை ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் சொல்வதுதான் இங்கு கவனத்துக்கு உரியது.

"தேர்தல் பணிகளில் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்களின் ஒத்துழைப்பு தேவைப்பட்டால், அதை பா.ஜ.க. தலைவர்கள் தான் கேட்க வேண்டும். இந்த முறை அவர்கள் எந்தக் கோரிக்கையும் வைக்கவில்லை' என்கிறது 'ஆர்கனைசர்'. தனது முகத்தைக் காட்டி 400 வென்று விடலாம் என்று மோடி நினைத்திருக்கலாம்!?



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.6.2024) முகாம் அலுவலகத்தில், தமிழக மஸ்ஜிதுகளின் ஐக்கிய ஜமாஅத் கூட்டமைப்பு தலைவர் எம். முஹம்மது பஷீர், செயலாளர் எஸ். முஹம்மது பெய்க், பொருளாளர் எஸ்.ஏ. லியாகத் அலி, துணை செயலாளர் எம். ஆரிப் சுல்தான் மற்றும் சென்னை மாவட்ட நிர்வாகிகள் ஏ. காசிம் முஸ்தபா, ஆர். முஹம்மது பாரூக், யு. ஹனீபா ஆகியோர் சந்தித்து, இஸ்லாமிய சமுதாய மக்களின் பல்வேறு கோரிக்கைகளை தொடர்ந்து நிறைவேற்றி வருவதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.6.2024) முகாம் அலுவலகத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், அவர்களின் மனைவி திருமதி ருச்சி ப்ரீதம் எழுதிய "Ancient Jain Legacy of Tamil Nadu" (தமிழ்நாட்டின் பண்டைய சமண மரபு) என்ற புத்தகத்தை வெளியிட்டார். உடன் சந்தியா பதிப்பகத்தின் உரிமையாளர் நட்ராஜன், டி.ஆர்.ஏ. நிறுவனத்தின் இயக்குநர் தாமன்பிரகாஷ் ரத்தோட், ரஞ்சித் ரத்தோட், சுதீர் லோடா ஆகியோர் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா

# தி.மு.கழக இளைஞர் அணி சார்பில் பேச்சுப் போட்டி!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 14 - கழக இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி பேச்சுப் போட்டி நடைபெறுகிறது என தி.மு.க. தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**

தலைமைக்கழக அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் சென்ற மாபெரும் தலைவரான முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டைக் கொண்டாடும் விதமாக, மாநிலம் முழுவதும் பல்வேறு வகைகளில் கழகத்தினராலும், தமிழ்நாடு அரசாலும் நூற்றாண்டு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

**பேச்சுப் போட்டி நடைபெறும் முறை**

இந்நிலையில், தி.மு.க. இளைஞர் அணி சார்பாக, கலைஞர் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில், 'என் உயிரினும் மேலான' என்ற தலைப்பில் மாநில அளவிலான பேச்சுப் போட்டி நடத்தப்பட உள்ளது. சிறந்த பேச்சுத்திறன் உள்ள புதிய மேடைப் பேச்சாளர்களை அடையாளம் காணும் இந்தப் போட்டியில், 18 முதல் 35 வயது வரையுள்ள ஆண்கள், பெண்கள், திருநர்கள் என அனைவரும் கலந்துகொள்ளலாம். இந்தப் போட்டிக்கு, 10 தலைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. பங்கேற்பாளர்கள் தங்களுக்கு விருப்பமான ஏதேனும் ஒரு தலைப்பைத் தேர்வு செய்து, அதையொட்டிப் பேச வேண்டும்.

**விண்ணப்பிக்க..**

இந்தப் போட்டியில் பங்கு கொள்ள விரும்புபவர்கள், www.kalaignar100pechu.org என்ற இணையதளத்தில் உள்ள 'விண்ணப்பம்' பகுதியைப் பூர்த்தி செய்து, 2024 ஜூலை 15ஆம் தேதிக்குள் பதிவு செய்துகொள்ள வேண்டும். அல்லது பூர்த்தி செய்த விண்ணப்பங்களை 'அன்பகம்', 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை -600018 என்ற முகவரிக்கு அஞ்சல் மூலம் 2024 ஜூலை 15ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

**தேர்வு விவரம்**

பதிவு செய்தவர்களுக்கு அவர்கள் மாவட்டங்களில் நடைபெறும் முதற்கட்டத் தேர்வில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்படும். முதற்கட்டத் தேர்வில் சிறப்பாகப் பேசி, நடுவர்களால் தேர்வு செய்யப்பட்டவர்கள் அடுத்த கட்டமாக மண்டல அளவிலான போட்டியில் கலந்துகொள்ள அழைக்கப்படுவார்கள். மண்டல அளவில் சிறப்பாகப் பேசித் தேர்வு செய்யப்படுபவர்கள், இறுதிக்கட்ட போட்டியில் கலந்துகொள்ள அழைக்கப்படுவார்கள். இறுதிப் போட்டியில் சிறப்பாகப் பேசிய மூவர், பரிசுகளுக்குத் தேர்வு செய்யப்படுவார்கள்.

**பரிசுத் தொகை**

வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசாக ரூ. 1 இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூ. 75 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ. 50 ஆயிரமும் வழங்கப்படும். மேலும் தலைமைக் கழகம் அறிவுறுத்தியபடி இந்தப் போட்டியில் கலந்துகொண்டவர்களில் சிறந்த நூறு இளம் பேச்சாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இந்தப் போட்டிகள் அனைத்தும், கலைஞர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும். போட்டிக்கான தலைப்புகள், விதிமுறைகள் ஆகியவற்றை www.kalaignar100pechu.org என்ற இணையதளத்தில் காணலாம்.

இவ்வாறு தலைமைக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### பருவமழைக்கு முன் காவிரி டெல்டா படுகையில்

# சிறப்பு தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்!

## அமைச்சர் துரைமுருகன் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 14- நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (12.06.2024) துறையின் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து துறை அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் பேசும்போது நீர்வளத் துறையின் மூலம் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் குறிப்பாக தடுப்பணைகள் மற்றும் அணைக்கட்டுகள் கட்டுமானம் செய்தல் பல்வேறு நீர் ஆதார கட்டுமானங்களில் மேற்கொள்ளப்படும் புனரமைக்கும் பணிகள் மற்றும் பருவமழைக்கு முன் காவேரி டெல்டா படுகையில் சிறப்பு தூர்வாரும் பணிகள் போன்ற அனைத்து பணிகளும் போர்க்கால அடிப்படையில் முழுவதுமாக செய்து முடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

கடந்த 12/2023 அன்று சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களை தாக்கிய மிக்ஜாம் புயல் காரணமாகவும், தென் மாவட்டங்களில் பெய்த வரலாறு காணாத அதீத கன மழை காரணமாகவும் நீர்நிலை கட்டுமானங்களில் ஏற்பட்ட சேதங்களை சீரமைக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நிரந்தர வெள்ள சீரமைப்பு பணிகளை விரைந்து முடித்திடவும் அறிவுறுத்தினார்கள். மேலும், பருவ மழை காலங்களில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும் அணைகள், குளங்கள் மற்றும் நீர்நிலைகளை தொடர்ந்து கண்காணித்திடவும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / திட்ட இயக்குநர், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் திரு தென்காசி சு ஜவகர், அரசு கூடுதல் செயலாளர் சு. மலர்விழி, அரசு சிறப்புச் செயலாளர் கா. முருகன், காவேரி தொழில்நுட்ப குழுமத்தின் தலைவர் ஆர். சுப்ரமணியன், முதன்மைத் தலைமைப் பொறியாளர் கு.அசோகன் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.